**செய்தி வெளியீடு எண்:756** **நாள்: 08.11.2017**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (8.11.2017) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நெடுஞ்சாலைத் துறையில் 89 இளநிலை உதவியாளர்கள் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள். மேலும், நெடுஞ்சாலைத் துறையின் மேம்படுத்தப்பட்ட புதிய வலைதளத்தினை (http://www.tnhighways.gov.in) துவக்கி வைத்தார்கள்.

நெடுஞ்சாலைத் துறையின் திட்ட செயலாக்கம் மற்றும் நிர்வாக பணிகளுக்கு உதவிட இளநிலை உதவியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. நெடுஞ்சாலைத் துறையின் பல்வேறு அலகுகளில் அனுமதிக்கப்பட்டுள்ள 550 இளநிலை உதவியாளர் பணியிடங்களில் ஏற்படும் காலிப்பணியிடங்கள் அவ்வப்போது தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நேரடியாகவும், கருணை அடிப்படையிலும் மற்றும் பதவி உயர்வின் மூலமும் நிரப்பப்படுகின்றன.

அந்த வகையில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் புதிதாக தெரிவு செய்யப்பட்டு, நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 89 இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

மேலும், நெடுஞ்சாலைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை திறம்பட கண்காணிக்கவும், துறையின் வளங்களை பாதுகாக்கவும், வளங்களை சீராக ஒதுக்கிடவும், திட்டங்கள் குறித்த தகவல்களை பொதுமக்களுக்கு அளித்திடவும்

பல்வேறு தகவல் தொழில்நுட்ப அமைப்புகளை நெடுஞ்சாலைத் துறை உருவாக்கியுள்ளது.

நெடுஞ்சாலைத் துறையின் வலைதளமானது, உபயோகிப்பவர்களின் வசதிக்காகவும், எளிதாக பயன்படுத்தும் வகையிலும், புதிய தோற்றப் பொலிவுடன் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த மேம்படுத்தப்பட்ட நெடுஞ்சாலைத் துறையின் வலைதளத்தினை (http://www.tnhighways.gov.in) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள். இதன்மூலம், பொதுமக்கள் வலைதளத்தில் அளிக்கப்பட்டுள்ள தகவல்களை எளிதாக பார்வையிட இயலும். மேலும், புதுப்பிக்கப்பட்டுள்ள இந்த வலைதளம், மாற்றுத்திறனாளிகளும் எளிதில் பயன்படுத்தும் வகையில் ஒலிவடிவத்துடனும், எழுத்துரு அளவு மற்றும் வண்ணங்களை மாற்றும் அம்சங்களோடும் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் திரு.ரெ.கோதண்டராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 8.11.2017